20.11.2025

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

<u>அசல் வழக்கு எண்.177/2023</u>

**2025**–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ம் நாள் வாதி/பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய வா.சா.**2–**வது நபரின் வாக்குமூலம் **1969**–ம் ஆண்டு 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி <u>திருமதி.**K**.காயத்ரி</u> என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரான்சிஸ் பெரியநாயகம் | த/பெ. | பிச்சை |
| கிராமம் | சோபனபுரம் | தாலுக்கா | |
| தொழில் | கிராம நிர்வாக அலுவலர் | சமூகம் | |
| வயது | 36 | நாள் | **20.11.2025** |

<u>**IA**.04/2025 அனுமதித்ததன் பேரில் சாட்சி விசாரிக்கப்படுகிறார்.</u>

<u>முதல் விசாரணை</u>

நான் நீதிமன்றத்தின் அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், நான் தற்போது சோபனபுரம் கிராம நிர்வாக அலுவலராக 01.07.2023 முதல் பணியாற்றி வருகிறேன். தாவா சொத்து சர்வே எண் 763/2 புதிய எண் 840/22 பரப்பு 28 சதுரமீட்டர் மனையானது அரசு புறம்போக்கு நிலம் அல்ல, மக்கள் குடியிருந்து வரும் பகுதி என்றும், மேற்படி சர்வே நெம்பரில் முத்தாள்–1, ரெங்கம்மாள் –2, கோவிந்தம்மாள்–3 ஆகியோர் அனுபவ சான்றிதழ் எங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டது, அந்த ஆவணம் தான் இது என

20.11.2025



வாதி வழக்கறிஞர் சாட்சியிடம் ஆவணத்தை காண்பித்தார், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு கையெழுத்து உள்ளது, முத்திரை உள்ளது, ஆனால் எந்த கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. மேலும் காண்பிக்க ஆவணம் ஒளிபட நகல் என கூறுகிறார், உண்மை தன்மை பற்றி எனக்கு தெரியவில்லை என்றும் கூறுகிறார்.

நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கு சம்மந்தமாக அழைப்பாணை பெற்ற பிறகு தாவா சொத்தை பார்வையிட்டீர்களா என்றால் பார்வையிட்டேன். நான் பார்வையிடும் போது தாவா சொத்தில் இரண்டு கட்டிடம் இருந்தது, கிழக்கு பக்கம் ஒன்றும், மேற்கு பக்கம் மற்றொன்றும் இருந்தது, அந்த இரண்டு கட்டிடமே கழிப்பிடமாக பயன்படுத்துகிறார்கள், கிழக்கு பக்கமாக உள்ள கழிப்பிடம் கட்டிடம் ராஜேந்திரன், த/பெ. சின்னசாமி என்பவர் அனுபவம் செய்து வருகிறார், மேற்கு திசையில் உள்ள கழிப்பிடம் கட்டமானது செல்வகுமார் அனுபவம் செய்து வருகிறார். அவ்வாறு மேற்கு திசையில் உள்ள செல்வகுமாரின் கழிவறை கட்டிடம் மட்டும் அரசு திட்டத்தின் படி மான்யம் பெற்று கட்டப்பபடடதாக குறிப்பு காணப்பட்டது, செல்வகுமார் என்ற பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தை வாதிகள் அனுபவத்தில் உள்ளார் என்று சொன்னால்

20.11.2025



நான் பார்வையிடும் போது அவர்கள் தான் அனுபவத்தில் இருந்தார்கள். நீதிமன்றத்தின் அழைப்பாணை பெற்று தாவா சொத்தை பார்வையிட செல்லும் போது தாவா சொத்தில் அருகாமையில் உள்ள நபர்களை தாவா சொத்தை பற்றி நான் விசாரித்தேன்.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.